In the Court of the Special District Judge Mcop Tribunal, Thanjavur.

**MCOP. No.1578/2024**

**நாள்: 20.04.2026**

**ம.சா. 1.** திருமதி. அன்னகாமு

Solemnly affirmed in a accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026 Sworn by Bench Clerk Name : A. Alavudeen

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் உறவுகாரர் வீரசெல்வம் இருசக்கர வாகனத்தில் பின்னார் அமர்ந்து செல்லும் போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் என் கணவரை அழைத்து கொண்டு வீரசெல்வம் என் வீட்டிற்கு அழைத்து வந்தாரா என்றால் இல்லை, சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனை அழைத்துபோனார். விபத்து நடந்திவுடன் வீரசெல்வம் என் கணவரை இருசக்கர வாகனத்தில் வைத்து என் வீட்டிறக்கு அழைத்து வந்தார் என்றும் அதன் பிறகு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக வேறு நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல போனேனா என்றால் இல்லை,வேறு நீதிமன்றத்திற்க சாட்சி சொல்லவில்லை. நான் புகாரில் சொல்லிய விவரத்தை யார் சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் அங்கு இருந்தவர்கள் சொல்லி புகார் அளித்தேன். மற்றொரு வாகனத்தில் வந்த நபர்களும் அடிப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். அந்த புகார் மனு சான்றிட்ட

நகல் எ.ம.சா.ஆ.1 ஆகும். அந்த புகார்மனுவில் விபத்து ஏற்படுத்திய இரண்டு வாகன ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை கோரியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் சென்ற வாகனத்தை ஓட்டிய வீரசெல்வம் என்பவர் கீழே விழுவில்லை எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் இடம் என்பது தஞ்சாவூர் திருச்சி விரைவு சாலை என்றால் சரிதான். வீரசெல்வம் என்பவர்தான் வேகமாக வாகனத்தை இயக்கி முன்னார் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி அந்த வாகனத்தில் உள்ள இருவரும் கீழே விழுந்தும், என் கணவரும் கீழே விழுந்து இந்த விபத்தை வீரசெல்வம் தான் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல, பின்னால் வந்த வண்டிதான் மோதியது. அதிக நஷ்டஈடு பெற பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்லிய விபரங்கள் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொண்டு என்முன்பாக கையொப்பம் செய்தார்.

20.04.2026

M AMIRTHAVELU

Digitally signed by M AMIRTHAVELU
Date: 2026.04.20 16:14:48 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி
(மோ.வா.வி.கோ.தீர்ப்பாயம்), தஞ்சாவூர்.